# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**MCOP.No.178/2021**

**நாள்– 28.02.2024**

**முத்துக்குமார்**

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

என்னுடைய தகப்பனார் தான் இருசக்கர வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார்எந்த வேலையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் பால் வியாபாரமும், விவசாயமும் செய்து வந்தார். என்னுடைய தகப்பனார் பால் வியாபாரமும், விவசாயமும் செய்து வந்தார் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரருடைய டிஎன் 74 டி 7832 பதிவெண் கொண்ட வாகனம் 3ம் எதிர்மனுதாரரிடத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் இருந்தது என்று என்னிடம் கூறினார்கள். 3ம் எதிர்மனுதாரர் தான் எங்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் தாக்கல் செய்திருக்கும் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் டிஎன் 74 டி 7832 பதிவெண் கொண்ட வாகனம் Maxi Cab வகையைச் சேர்ந்தது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் இந்த Maxi Cab வாகனத்தின் காப்பீடு சான்றிதழைத் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1, 2 எதிர்மனுதாரர்களிடம்இருந்து காப்பீடு சான்றிதழைப் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.3ல்

குறிப்பிடப்பட்டுள்ள காப்பீடு சான்றின் எண்ணானது இருசக்கர வாகனத்திற்குரியது என்றால் சரியல்ல. அந்த காப்பீடு சான்றும் Liability Only என்பதன் கீழ் வழுங்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. அந்த காப்பீடு சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் இந்த விபரங்கள் தெரிந்துவிடும் என்பதால் தான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் Maxi Cab வாகனத்திற்கு எந்த காப்பீடும் நிலுவையில் இல்லை என்றால் சரியல்ல. காப்பீடு சான்று இல்லாத மேக்ஸி கேப் வாகனத்தின் காப்பீடு கழகம் என்று இந்த எதிர்மனுதாரரை சேர்த்த இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.9 சட்ட அறிவிப்பில் எந்த வகையான வாகனம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காப்பீடு வழங்கியது இருசக்கர வாகனத்திற்கு என்று தெரிந்ததால் தான் எந்த வகையான வாகனம் என்று இந்த அறிவிப்பில் கூறவில்லை என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் ஆவணங்கள் பட்டியலில் ம.சா.ஆ.9 ஆக 23.03.2021ல் 3ம் எதிர்மனுதாரருக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் 26.03.2021ல் சட்ட அறிவிப்பு அனுப்பியதாகக் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். இதே நிரூபண வாக்குமூலத்தில் 27.03.2022ல் சட்ட அறிவிப்பை 3ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதாகவும் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.10 ஆன அஞ்சலக ஒப்புதல்அட்டையில் யார் பெற்றுகொண்டார்கள் என்ற விபரம் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.9ன் அஞ்சல் ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.9 ஆன சட்டஅறிவிப்பில் எந்த தேதியில் அனுப்பப்பட்டது என்ற விபரம் எங்கும் இல்லை என்றால் சரிதான். சட்ட அறிவிப்பு எதுவும் 3ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. சட்டத்திற்கு புறம்பாக இழப்பீடு பெறவேண்டி சட்டத்திற்கு புறம்பாக சட்ட அறிவிப்பு அனுப்பியதாக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. அதனால் தான் இந்த சட்ட அறிவிப்பின் அஞ்சல் ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு ஏதாவது இழப்பீடு கிடைக்கவேண்டுமென்றால் காப்பீடு இல்லாததால் 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய அப்பா விவசாயம் செய்தார் என்பதற்காக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பால்வியாபாரம் செய்து 20

ஆயிரம் சம்பாதித்தார் என்பதற்கு ஆவணங்களோ, வங்கிக் கணக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள காப்பீட்டின் எண்ணானது இருசக்கர வாகனத்திற்குரியது என்றும், மேக்சி கேப் வாகனத்திற்குரியது அல்ல என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. மேக்சி கேப் வாகனத்திற்கு விபத்து சமயத்தில் இந்த 3ம் எதிர்மனுதாரரிடம் எவ்வித காப்பீடும் இல்லாததால் இந்த 3ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய தந்தை ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையான ம.சா.ஆ.4 இந்த இருசக்கர வாகனத்தின் உரிமையாளராக என்னுடைய தந்தை காண்பிக்கப்பட்டிருக்கிறார் என்றால் சரிதான். இந்த ஆய்வறிக்கையில் என்னுடைய தந்தைக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அதே ஆய்வறிக்கையில் என்னுடைய அப்பா ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்திற்கான காப்பீடு சான்றும் தாக்கல் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். என்னுடையஅப்பா ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு காப்பீடு இல்லாததால் இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக மேக்சி கேப் வாகனத்தின் காப்பீடு கழகமாக இந்த 3ம் எதிர்மனுதாரர் தவறாக சேர்க்கப்பட்டிருக்கிறார் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 பிரேதப்பரிசோதனை அறிக்கையில் என்னுடையஅப்பா தலைக்காயத்தினால் இறந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். என்னுடைய அப்பா தலைக்கவசம் அணியாமல் கவனக்குறைவாக சென்றதால் தான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நாங்கள் கோரியிருக்கும் இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2024.02.28 17:20:40 +0530